செ.வெ.எண்.118

<u>பத்திரிக்கை செய்தி</u>

நாள்: 17/02/2020.

போக்குவரத்து ஆணையர், சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகியோர்களின் அறிவுரைகளின்படி ஜனவரி 2020-ம் மாதத்தில், துணைப் போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர் சரகத்திற்குட்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் இயக்கூர்தி ஆய்வாளர்கள் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனைத்து வகை வாகனங்களில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக சிறப்பு தணிக்கைகள் செய்யப்பட்டன.

ஜனவரி 2020-ம் மாதம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட இந்த தணிக்கையின்போது மொத்தம் 12701 வாகனங்கள் தணிக்கை செய்யப்பட்டன. இதில் 1632 வாகனங்களுக்கு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டன. இணக்கக்கட்டணம் ரூ.12,05,700/- வசூலிக்கப்பட்டது. வசூலிக்கப்பட வேண்டிய இணக்க கட்டணமாக ரூ.29,94,800/- நிர்ணயிக்கப்பட்டது. தமிழ்நாட்டிற்கு முறையாக வரி கட்டாமல் இயக்கப்பட்ட சரக்கு வாகனங்கள், ஆம்னி பேருந்துகள், மேக்ஸிகேப், ஜே.சி.பி. வாகனங்கள் மற்றும் கார்களிடமிருந்து தமிழ்நாட்டிற்கான சாலை வரியாக ரூ.9,57,005/- வசூலிக்கப்பட்டது. அதிக ஆட்களை ஏற்றிச் சென்ற 203 வாகனங்கள் மீதும், ஓட்டுநர் உரிமம் இல்லாத 328 வாகனங்களின் மீதும், காப்புச் சான்று இல்லாத 184 வாகனங்கள் மீதும், கண் கூசும் முகப்பு விளக்கு பொருத்திய 118 வாகனங்களின் மீதும், ஒளிரும் சிவப்பு பிரதிபலிப்பு நாடா இல்லாத 188 வாகனங்களின் மீதும், தகுதிச் சான்று இல்லாத 75 அனைத்து வகை வாகனங்களுக்கும் தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் பல்வேறு குற்றங்களுக்காக 148 வாகனங்கள் சிறை பிடிக்கப்பட்டுள்ளன.

மேலும், தஞ்சாவூர் சரகத்தில் ஜனவரி 2020-ம் மாதத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பாக, அதிவேகமாக வாகனங்கள் ஓட்டிச் சென்ற 47 வாகன ஓட்டிகளுக்கும், தலை கவசம் அணியாமல் இயக்கிய 119 வாகன ஓட்டிகளுக்கும், கைபேசியில் பேசியபடி வாகனங்கள் இயக்கிய 16 வாகன ஓட்டிகளுக்கும், சீட் பெல்ட் அணியாமல் வாகனங்கள் இயக்கிய 267 வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் அதிக எடை ஏற்றி இயக்கிய 84 வாகன ஓட்டிகளுக்கும் தணிக்கை அறிக்கைகள் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

துணைப் போக்குவரத்து ஆணையர்,<br>
தஞ்சாவூர் சரகம்.